**abandon**

**(1)** விட்டுவிடு, viṭṭuḍu, 4 tr, relinquish; quit a job; leave; give s.t. up, என் அண்ணன் ஆசிரியர் பணியை விட்டுவிட்டு இப்பொழுது காவல் துறை அதிகாரியாகப் பணியாற்றுகிறார், en aṇṇan aasiriyar veeleye viṭṭuṭṭu ippa kaaval tore adihaariyaa veele paakraaru, ¯My older brother has abandoned his teaching post and has now joined the police force. ≈ 1: கண்ட்ரோல் எடுத்துவிடு kanṭrool eḍuttuḍu, 4 tr, ≈ 2: சீர்குலை siirkole, 2b intr, **(2)** கைவிடு, kaiviḍu, 4 intr, forsake; leave; quit; let go of s.t.; give s.t. up as a lost cause, கடைசியாக மருத்துவர்களும் அவனைக் கைவிட்டுவிட்டார்கள், இனி என்ன செய்ய முடியும்?, kaḍesile ḍaakṭar ellaarum avane kaiviṭṭuṭṭaanga; enna seyya muḍiyum?, ¯When all the doctors have abandoned his case, what more is there to be done?

**abashed (be)**

**(1)** கூச்சப்படு, kuuccappaḍu, 4 intr, be bashful or shy; be reticent, மேடையில் ஏறிப்பேசச் சிறிதும் கூச்சப்படக்கூடாது., meeḍeyle eerippeesa konjamum kuuccappaḍakuuḍaadu, ¯Students should not feel shy about getting up on the stage and speaking in public.

**abate**

**(1)** இறங்கு, erangu, 3 intr, become reduced; let up, as heat; get lowered, get cooled down, தமிழகத்தில் இப்பொழுது வெய்யில் கொஞ்சம் இறங்கியிருக்கிறது, tamiṟahattle ippa veyyilu konjam erangiyirukku, ¯The heat wave in Tamilnadu has now abated somewhat.

**abated (be)**

**(1)** தணி, taṇi, 2b intr, be reduced; be lowered; get relieved, இந்த மாதம் சூடு சற்றுத் தணிந்துள்ளது, inda maasam suuḍu konjam taṇinjirukku, ¯This month, the heat has abated somewhat. **(2)** அடங்கு, aḍangu, 3 intr, be alleviated, be pacified, be allayed, இந்த ஊரில் திருட்டுப் பயம் இப்பொழுதுதான் கொஞ்சம் அடங்கியிருக்கிறது., inda uurle ippa taan tiruṭṭu bayam konjam korenjirukku, ¯Fears about theft and burglaries have only recently abated to a certain extent in this area.

**abet**

**(1)** தூண்டிவிடு, tuuṇḍiviḍu, 4 tr, incite; instigate; encourage or assist (an offender or offense)., அரசியல்வாதிகள்தான் மாணவர்களை இந்தப் போராட்டத்தைச் செய்யத் தூண்டிவிடுகிறார்கள், arasiyalvaadingadaan maaṇavangaḷe inda pooraaṭṭatte seyya tuuṇḍiviḍraanga, ¯There is nobody other than politicians, aiding and abetting the students who are carrying out this strike. **(2)** உடந்தையாக இரு, oḍandeyaayiru, 7 intr, be an accessory to; aid and abet, நாம் கெட்ட காரியங்களுக்கு எப்போதும் உடந்தையாக இருக்கக்கூடாது, naama keṭṭa kaariyangaḷukku eppavum oḍandeyaa irukkakkuuḍaadu, ¯We should never be in a position of aiding and abetting wrongdoing and bad deeds.

**abhor**

**(1)** அருவரு, aruvaru, 6 tr, loathe, despise; hate, detest, இவர் எந்தக் காரணமும் இல்லாமல் என்னை மிகவும் அருவருக்கிறார், ivaru enda kaaraṇamum illaame enne aruvarukkraaru, ¯He seems to absolutely abhor me for no reason at all.

**abide**

**(1)** கடைப்பிடி, kaḍeppiḍi, 6b tr, follow; abide by; stick to the letter of, அரசு விதிகளைக் கடைப்பிடித்தால் எந்தவிதமான தொந்தரவும் வராது, arasu vidingaḷe kaḍe piḍiccaa endavidamaana tondaravum varaadu, ¯If one abides by government rules and regulations, there shouldn't be any problem or trouble. **(2)** பொறுத்துக்கொள் (1 tr), poruttukko , 4 tr, tolerate; put up with, (HS99 2.3.5.1 [19]), இனியும் அவன் செய்யும் தொந்தரவை என்னால் பொறுத்துக்கொள்ள முடியாது, inimeeleyum avan seyyura tondarave ennaale poruttukka muḍiyaadu, ¯I no longer can abide the kind of troubles and problems he creates.

**abjure**

**(1)** கைவிடு, kaiviḍu, 4 tr, quit (a habit); abandon; renounce, repudiate; distance o.s. from, அமைச்சர் எப்பொழுதும் தன் கொள்கைகளைச் சிறிதும் கைவிடமாட்டார், amaiccar eppavum tannooḍa koḷhengaḷe konjanguuḍa kaiviḍamaaṭṭaaru, ¯The minister never abjures his policies or principles.

**able (be)**

**(1)** இயல், iyalu, 1 intr, be possible, (HS99 2.3.5.1 [19]), என் தம்பியால் நிச்சயம் அந்தப் பணியைச் செய்து முடிக்க முடியும், ennooḍa tambiyaale anda veeleye niccayamaa senju muḍikka muḍiyum, ¯My little brother is certainly able to accomplish that task. **(2)** முடி-(யும்), muḍi-(yum), 3pn + instr, be possible, have the ability, wherewithal, stamina, fortitude to do (s.t.); be willing and able to do (s.t.), (HS99 2.3.5.2 [19]), என்னால் நீங்கள் சொன்ன அந்த வேலையைச் சரியாகச் செய்ய முடியும், ennaale niinga sonna anda veeleye

sariyaa seyya muḍiyum, ¯I will be able to successfully complete the work that you specified. **(3)** முடியும், muḍiyum, 2b intr + nom, be possible to vb., be able to vb., நான் அதைச் செய்ய முடியும், naan ade seyya muḍiyum, ¯I can, am able to do that.

## abolish

**(1)** ஒழி, oẓi, 6b tr, annul, do away with, obliterate, put a stop to, குதிரைப் பந்தயம் ஆடும் சட்டத்தை இந்த அரசு அடியோடு ஒழித்தது நல்லது, kudire pandayam aaḍra saṭṭatte inda arasu aḍiyooḍa oẓiccadu nalladu, ¯One good thing this government has done is to completely abolish horse racing. **(2)** நீக்கு, niikku, 3 tr, discard, oust, terminate; get rid of; put a stop to, போன நூற்றாண்டில் தான் 'சதி' என்னும் பெருங்கொடுமை இந்தியாவில் நீக்கப்பட்டது, poona nuuṭraanḍuledaan sadiingare periya koḍumeye indiyaavule niikkunaanga, ¯Only in the 20th century was the heinous crime of "Sati" abolished in India. **(3)** ஒழி, oẓi, 6b tr, obliterate, get rid of, put a stop to, shut down, சென்னையில் நடந்துவந்த குதிரைப் பந்தயத்தைப் பத்து ஆண்டுகளுக்கு முன் எப்படியோ ஒழித்தார்கள், cenneyile naḍanduvanda kudirepandayatte pattu varuṣattukku munnaaḍi eppaḍiyoo oẓiccaanga, ¯Ten years ago they managed to abolish the horse racing that was going on in Madras.

## abort

**(1)** கருச்சிதைவு செய் (1 tr), karuccidevu seyyi , 2b tr, terminate pregnancy, கமலா போன மாதம் கருச்சிதைவு செய்துகொண்டாள், kamalaa poona maasam karuccidevu senjukiṭṭaa, ¯Kamala underwent an abortion last month.

## abrade

**(1)** தேய், teey, 2b intr, be removed, worn away, rubbed raw; be effaced by rubbing; wear down, erode, scrape away, corrode, eat away at, gnaw away at., நடந்து நடந்து என் கால்கள் தேய்ந்துவிட்டன, naḍandu naḍandu en kaalellaam teeynjiḍuccu, ¯The skin on my feet has become abraded from walking so much.

## abscond (with)

**(1)** ஓடிப்போ, ooḍippoo, 3b intr, run away secretly or suddenly (taking s.t.); elope, அந்த வீட்டுப்பெண் தன் காதலனுடன் போன வாரம் எங்கோ ஓடிப்போனாள், anda viiṭṭu poṇṇu tannooḍa kaadalanooḍa engeeyoo ooḍippoonaa, ¯The neighbor family's girl absconded with her lover last week.

## absent (be)

**(1)** வராதிரு, varaame iru, 7 intr, fail to be present; fail to show up; absent o.s., என் நண்பன் இன்னும் ஏன் இங்கே வராதிருக்கிறான் என்பது எனக்கு விளங்கவில்லை, ennooḍa sneehidan een inge innum varaame irukkraangradu enakku veḷangale, ¯I am simply not able to understand the reason why my friend is absent. **(2)** வரவில்லை, varalle, 7 intr, fail to show up; absent o.s.; be missing, அவன் நேற்று வரவில்லை, avan neettu varalle, ¯He was absent (i.e. didn't come) yesterday.

## absorbed (be)

**(1)** உறிஞ்சிக்கொள் (1 tr), urinjikko , 4 intr, be absorbed, as water in ground, எவ்வளவு மழை பெய்தாலும் மண் அப்படியே ஈரத்தை உறிஞ்சிக்கொள்கிறது, evvaḷavu maẓe penjaalum maṇṇu appaḍiyee iiratte urinjiradu, ¯The soil is capable of absorbing all the water, no matter how heavy the downpour.

## absorbed, be/become

**(1)** ஒன்றிப்போ, onrippoo, 3b intr, be involved in, become one with, become like s.t.; resonate with, get into s.t., get wrapped up or caught up in; lose o.s. in, அவன் தான் படித்துக்கொண்டிருந்த நாவலோடு அப்படியே ஒன்றிப்போனான், avan taan paḍiccikiṭṭirunda naavalooḍa appaḍiyee onrippoonaan, ¯He really became absorbed in the novel that he was reading.

## abstain

**(1)** விடு, viḍu, 4 tr, refrain from, avoid; get rid of, நீ முதலில் உன்னுடைய குடிப் பழக்கத்தை விடு. அப்பொழுதுதான் நீ கொஞ்சமாவது உருப்படுவாய், nii modalle unnooḍa kuḍi paẓakkatte viḍu, appadaan nii konjamaavadu uruppaḍuve, ¯First of all, you need to abstain from drinking–only then will you be able to function as a normal person.

## abuse

**(1)** ஏசு, eesu, 3 tr, reproach, insult, scold; revile, vituperate, அம்மா தங்கையை மிகவும் ஏசினாள், ammaa tanggecciye rombavum eesunaa, ¯The mother abused her daughter verbally. **(2)** தூற்று, tuuttu, 3 tr, asperse, injure, insult; badmouth, diss, என் நண்பன் யாரையும் எப்பொழுதும் தூற்ற மாட்டான், ennooḍa naṇban yaareyum eppavum tuutta maaṭṭaan, ¯My friend never insults, abuses, or ridicules anybody, ever. **(3)** திட்டு, tiṭṭu, 3 tr, scold, revile, chastise severely, உன்னிடம் பணி செய்பவர்களை அடிக்கடித் திட்டாதே, ungiṭṭe veele seyravangaḷe aḍikkaḍi tiṭṭaade, ¯It's not good

practice to abuse your co-workers. **(4)** கொடுமைப்படுத்து, koḍumepaḍuttu, 3 tr, bully; treat cruelly; torture; pick on s.o., அவள் கணவன் தன்னைக் கொடுமைப்படுத்தியதால், அவள் வீட்டை விட்டு வெளியேறினாள், ava kaṇavan avaḷe koḍumepaḍuttinadunaale ava viiṭṭe viṭṭu veḷiyeerinaa, ¯Because her husband abused her, she left the house.

**accede (to)**
**(1)** ஏற்றுக்கொள் (1 tr), eettukkoo, eḍuttukkoo, 4 tr, attain an office; take office, assume a post, தி.மு.க.அமைச்சரவை இன்று காலை பதவி ஏற்றுக்கொண்டது, ti.mu.ka. mandiri sabe iṇṇekki kaaleyile padavi eḍuttukiṭṭadu, ¯The D.M.K.Ministry acceded to the oath of office this morning.

**accent**
**(1)** அழுத்தம்கொடு, aẕuttamkuḍu, 6 tr, speak forcefully, emphasize, give greater force, accentuate, அதிகாலையில் எழுந்து படிக்கிறதைப் பற்றி என் தந்தை அழுத்தம் கொடுத்துப் பேசுவார், kaaleyle siikkram eẕundu paḍikkrade engappa aẕuttam kuḍuttu peesuvaaru, ¯My father used to accent (the importance) of waking up early in the morning and studying.

**accept**
**(1)** ஏற்றுக்கொள் (1 tr), eettukko, 4 tr, receive, admit, take upon o.s. (an idea, principle, etc. ), அப்பா சொல்வதை ஏற்றுக்கொள்வது உனக்கு நன்மை செய்யும், appaa solrade eettukkradu onakku nalladu seyyum, ¯It's to your advantage for you to accept what father says because it'll do you good in the end. **(2)** பெற்றுக்கொள் (1 tr), vaangikkoo , 4 tr, get, receive (an object), நான் தரும் பணத்தை இப்போதைக்குப் பெற்றுக்கொள். மீதியைப் பிறகு வாங்கிக்கொள், naan tara paṇatte ippo vaangikkoo. miidiye naan perahu tareen, ¯For now, please accept the money that I'm giving you. I'll give you the rest later on. **(3)** எடுத்துக்கொள் (1 tr), eḍuttukko , 4 tr, take for o's own use, admit, என்னுடைய புத்தகத்தை நீ உன் உபயோகத்திற்காக எடுத்துக்கொள்ளலாம், ennooḍa pustahatte nii onnooḍa obayoohattukkaaha eḍuttukkalaam, ¯Please accept this book of mine for your own use. **(4)** ஏற்றுக்கொள் (1 tr), eettukkoo , 4 tr, approve of, agree to, அப்பா சொல்வதை ஏற்றுக்கொள். அது உனக்குப் பிற்காலத்தில் நன்மை பயக்கும், appaa solrade eettukkoo, adu pinnaaḍi onakku odeviyaa irukkum, ¯If you accept now what father recommends, you'll be better off in the future.

**accept as**
**(1)** பெற்றுக்கொள் (1 tr), vaangikkoo , 4 tr, accede to an estate, inherit, நீ இதை என் பரிசாகப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் என்னிடம் கேட்டுக்கொண்டார், nii ide ennooḍa parisaa vaangikkaṇumṇu avaru enkiṭṭe keeṭṭukiṭṭaaru, ¯He asked me to consider this as a gift from him and accept it as such.

**acclaim**
**(1)** ஆர்ப்பரி, aarppari, 6b intr, welcome with loud shouts; praise or applaud enthusiastically and publicly., தங்கள் தலைவருடைய பேச்சைத் தொண்டர்கள் மிகவும் ஆர்ப்பரித்து வரவேற்றார்கள், tanga talevarooḍa peecce toṇḍarunga romba aarpparíccu varaveettaanga, ¯The party members acclaimed the speech of their party leader with great enthusiasm.

**acclimatize**
**(1)** பழக்கு, paẕakku, 3 tr, accustom, make accustomed to, train, make s.o. get used to, தினமும் உடற்பயிற்சி செய்ய மாணவர்களைப் பழக்க வேண்டும், denamum teehappayirci seyya maaṇavangaḷe paẕakkaṇum, ¯We have to acclimatize our students to doing physical exercise on a daily basis.

**accompany**
**(1)** அனுப்பிவா, anuppivaa, 2c tr, go with s.o. a little distance, see, send s.o. off ; give s.o. a send off, தம்பி நீ சிறிது தூரம் போய் அக்காவை ஊருக்கு அனுப்பிவிட்டு வாயேன், tampi, nii konja duuram pooyi akkaave uurukku anuppiṭṭu vaayeen, ¯Son, how about you accompany your older sister a bit and see that she gets off okay. **(2)** (x)உடன்செல் (1 intr), (x)ooḍu poo , 3b intr, go along with another, (HS99 2.3.5.1), கண்ணன் மிகச் சிறிய பையன். அதனால் யாராவது அவனுடன் சென்னைக்குச் செல்வது நல்லது, kaṇṇan romba cinna payyan. adanaale yaaraavadu avanooḍu cennekki pooradu nalladu, ¯Kannan is young, so it would be good if someone would accompany him to Chennai. **(3)** கூடப்போ, kuuḍappoo, 3b intr, go along with s.o., அம்மா பம்பாய்க்குத் தனியாகப் போகப் பயந்ததால் நானும் கூடப் போனேன், ammaa bambaayikki taniyaa pooha payandadaale, naanum kuuḍap pooneen, ¯Since mother was afraid of going alone to Bombay, I decided to accompany her.

**accomplish**
**(1)** முடித்துவிடு, muḍiccidu, 4 tr, finish, execute fully, take care of, செயலாளர் தனக்குக் கொடுக்கப்பட்ட

வேலையைத் திறம்பட முடித்துவிட்டார் என்பதில் எந்தவிதச் சந்தேகமும் இல்லை, seyalaaḷar tanakku kuḍukkappaṭṭa veeleye terameyaa muḍiccuṭṭaarungradule endavidamaana sandeehamum ille, ¯There is no doubt at all that the work allotted to the secretary has been accomplished in an effective and efficient way. **(2)** நிறைவேற்று, nereveettu, 3 tr, fulfill, complete, ஒருவர் தான் எடுத்துக்கொண்ட காரியத்தை மன நிறைவாக நிறைவேற்றுவது சிறப்பிற்குரியது, oruttaru taan eḍuttukiṭṭa kaariyatte mana nerevaa nereveettaradu romba nalladu, ¯Whatever task one has undertaken should always be accomplished in an adequate way.

**accord (be in)**
**(1)** ஒப்புக்கொள் (1 tr), oppukkoo , 4 intr, agree with, be in agreement with, நான் அவர் சொன்ன நல்ல கருத்தை முழு மனதாக ஒப்புக்கொள்கிறேன், naan avaru sonna karutte muṟu manasaa oppukkureen, ¯I am whole-heartedly in accord with the views expressed by him.

**accord (with, be in)**
**(1)** பொருந்து, porundu, 3 intr, agree with, be in harmony with; sit well with, நீங்கள் சொன்ன கருத்தோடு என்னுடைய எண்ணமும் பொருந்துகிறது அல்லவா?, niinga sonna karuttooḍa ennooḍa karuttum porundudu illeyaa?, ¯Don't you think that my thought process is in accord with yours?

**account**
**(1)** கணக்குக் காட்டு, kaṇakku kaaṭṭu, 3 tr, account for; make a proper record or accounting of, நல்ல பொருளாளருக்கு அழகு முறையாகக் குழுவுக்குக் கணக்குக் காட்டுவதாகும், nalla poruḷaaḷarukku aṟahu moreyaa kuṟuvukku kaṇakku kaaṭṭradudaan, ¯A good accountant should be able to make a proper accounting to the governing committee.

**account (for)**
**(1)** காரணம்கூறு, kaaraṇam sollu, 3c tr, explain satisfactorily, give reasons, justification for, நீ அந்தப் பெண்ணிடம் தவறாக நடந்துகொண்டதற்கு நீதி மன்றத்தில் என்ன காரணம் கூறுவாய்?, nii anda poṇṇukiṭṭe tappaa naḍandukkiṭṭadukku niidi manrattule enna kaaraṇam solluvee?, ¯What can you say to the Court that will account for your indecent behavior with that girl?

**accredit**
**(1)** மதிப்பேற்று, madippeettu, 3 tr, accredit somebody with s.t.; evaluate correctly, give a true estimation, give credit where credit is due., பல்கலைக்கழகப் பணிகளை மதிப்பேற்ற ஒரு மதிப்பேற்றுக்குழு அமைக்கப்பட்டுள்ளது, palhalekkaṟaha paṇingaḷe madipeetta oru madippeettakkuṟu amekkappaṭṭirukkradu, ¯An evaluation council has been formed in order to accredit the programs of the universities.

**accrue (to)**
**(1)** சேர், seeru, 2 intr, arise through increase or addition; mount up, பணக்காரர்களுக்கு எப்படியும் பணம் வந்து சேர்ந்து கொண்டே உள்ளது, paṇakkaarangaḷukku eppaḍiyum paṇam vandu seendukkiṭṭee irukku, ¯Somehow more and more wealth seems to accrue to rich people.

**accumulate**
**(1)** குவி, kuvi, 6b tr, heap up, pile up, store up; be built up, தஞ்சாவூர்க் கிடங்கில் நெல் குவிந்து கிடக்கிறது, tanjaavuuru keḍangule nellu kuvinji keḍakkudu, ¯There is plenty of paddy accumulated in the Thanjavur godowns. **(2)** திரட்டு, teraṭṭu, 3 tr, raise money, gather, pile up (riches, fame ,etc), நல்ல பணிகளுக்காக ஊர் மக்களிடமிருந்து பொருளுதவி திரட்டுவதில் தவறில்லை, nalla kaariyangaḷukkaaha uur janangakiṭṭeerundu poruḷudavi teraṭṭradule tappille, ¯There is nothing wrong in accumulating funds from the townspeople for good causes. **(3)** குவி, kuvi, 2b intr, be carried or driven into heaps or piles; be plentiful or numerous, பணம் எவ்வளவு குவிந்தாலும் எனக்கு நிம்மதி இல்லாமல் இருக்கிறது, paṇam evvaḷavu kuvinjaalum enakku nimmadi illaama irukku, ¯No matter how much money accumulates, I have no peace of mind.

**accursed (be)**
**(1)** சபிக்கப்படு, sabikkappaḍu, 4 intr, be under a curse, மகன் தன் வாழ்க்கையில் கஷ்டப்படுவதற்கு அவனுடைய பெற்றோர்களை ஏன் சபிக்க வேண்டும்?, mahan tannooḍa vaaṟkeyile kaṣṭa paḍradukku avanooḍa pettavangaḷe een sabikkaṇum?, ¯Why should the parents be so accursed, just because their son is undergoing a lot of suffering? **(2)** வெறுக்கப்படு, verukkappaḍu, 4 intr, be detestable, despicable, சாதி வேறுபாடு காட்டுவது பொதுவாக இன்று எங்கேயும் வெறுக்கப்படுகிறது, jaadi veerupaaḍu kaaṭṭradu iṇṇekki engeyum romba verukkappaḍudu, ¯Displaying caste and communal differences so openly is very much a part of this accursed modern behavior.

**accuse**

**(1)** பழி சுமத்து, paṟi somattu, 3 tr, charge wilfully, frame, வீணாக ஒருவர் மீது பழிசுமத்துவது பாவம், viiṇaa oruttaru meele paṟi somattradu paavam, ~It is shame to accuse somebody for no reason. **(2)** குற்றம் சொல்லு, kuttam sollu, 3c tr, blame, charge with a crime, level accusations against, (HS99 2.4.2.2, 3pn + dat), இவ்வளவு மோசமான நிதி நிலைமைக்கு யார் மீது குற்றம் சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை, ivvaḷavu moosamaana nidi nelamekki yaar meele kuttam solraduṇṇu enakku teriyalle, ~I do not know whom to accuse for the terrible financial conditions that prevail. **(3)** பழி கூறு, paṟi sollu, 3c tr, blame, lay the fault on, (HS99 2.4.2.2.), தம்பீ, இப்படி ஒருவர் மீது வீணாகப் பழி கூறக்கூடாது, tambii, ippaḍi oruttar meele viiṇaa paṟi solla kuuḍaadu, ~Young man, you should not accuse others unnecessarily. **(4)** குற்றம் சாட்டு, kuttam saaṭṭu, 3 tr, make a formal accusation; censure; denounce, அப்பாவியின் மீது வக்கீல் குற்றம் சாற்றுகிறார், appaavi meele vakkiil kuttam saaṭṭraaru, ~The lawyer is accusing an innocent person.

**accustom**

**(1)** பழகிக்கொள் (1 intr), paṟahikkoo , 4 intr, get used to, accustomed to, acclimatized to, நீ இந்த இளம் வயதில் நீந்த பழகிக்கொள், nii inda eḷam vayasule niinja paṟahikkoo, ~At your young age, you should try to accustom yourself to swimming.

**accustomed (be)**

**(1)** பழகிப்போ, paṟahippoo, 3b intr, get used to s.t.; become habituated to, (HS99 3.14.1 3pn + dat.), தினமும் நேரம் கழித்துச் சாப்பிடுவது எனக்குப் பழகிப்போயிற்று, denamum neeram kaṟicci saappaḍradu enakku romba paṟahi pooccu, ~I have gotten very accustomed to eating very late on a daily basis.

**accustomed, get/be**

**(1)** பழகிக்கொள் (1 intr, paṟahikko , 4 intr, accustom o.s. to, get used to, அமெரிக்காவில் ஒருவர் முதலில் கார் ஓட்டப் பழகிக்கொள்ள வேண்டும், amerikkaavule oruttaru modalle kaaru ooṭṭa paṟahikkaṇum, ~In America, you just have to get accustomed to driving a car.

**ache**

**(1)** நோ, noo, 2 intr, be in pain; suffer from, அம்மா இன்று தனக்குத் தலை நோகிறது என்று என்னிடம் சொன்னாள், ammaa iṇṇekki tanakku tale noovuduṇṇu enkiṭṭe sonnaa, ~My mother said she's suffering from a head ache today. **(2)** குடை, koḍe, 2b intr, ache in limbs and bones, (HS99 3.14.1 3pn + dat.), பாட்டிக்குக் கை கால் குடைகிறதாம். ஆகவே வைத்தியரிடம் காட்டவேண்டும், paaṭṭikki kayyi kaalu koḍeyradaam; adanaale vaittiyarkiṭṭe kaaṭṭaṇum, ~My grandmother reports aches and pains in her hands and legs, so we better take her to the doctor. **(3)** வலி, vali, 6b intr (3pn + dat), hurt, smart, have pain, (HS99 3.14.1), எனக்குத் தலை வலிக்கிறது, enakku tale valikkudu, ~my head aches; I have a headache. **(4)** குத்து, kuttu, 3 intr, have intermittent stabbing pains, sting, stab, அடிபட்ட இடத்தில் மிகவும் குத்துகிறது என்று என் தங்கை சொல்கிறாள், adipaṭṭa eḍattule romba kuttuduṇṇu ennooḍa tangecci solraa, ~My little sister says that she's having a lot of aching and stinging feelings in the area.

**achieve**

**(1)** அடை, aḍe, 2b tr, attain a desired end, aim; reach, நம் பிரதமர் தான் எண்ணியதை அடையாமல் விடமாட்டார், namma pradamaru taan neneccade aḍeyaame viḍamaṭṭaaru, ~When our Prime Minister has a particular goal, he will not abandon it until he has achieved the desired end. **(2)** சாதி, saadi, 6b tr, persevere, persist in attaining a desired end; stick with s.t. until end is attained, அவர் தான் எடுத்துக்கொண்ட செயலைச் சாதிக்காமல் விடமாட்டார், avaru taan eḍuttukiṭṭa kaariyatte saadikkaame viḍamaaṭṭaaru, ~He's the kind of guy who won't leave a project until he achieves his goals. **(3)** அடை, aḍe, 2b tr, reach, approach, உண்மையும் உறுதியும் கொண்டு உழைத்ததால் அவரால் நினைத்ததை அடைய முடிந்ததில் வியப்பொன்றும் இல்லை, uṇmeyaavum urudiyooḍeyum oṟeccadaale avaraale nenecca maadiri aḍeyamuḍinjadule aacaariyam ille, ~Since he worked hard and put in a lot of effort and devotion, it's no wonder that he was able to achieve what he set out to do.

**acidify**

**(1)** அமிலமாக்கு, amilamaakku, 3 tr, convert into an acid, அந்த இரண்டு திடப்பொருளை எடுத்துக் கலந்து ஒரு அமிலமாக்கு, anda reṇḍu teḍapporuḷe eḍuttu kalandu eedaavadu oru amilamaakku, ~Mix those two solids and acidify them.

**acknowledge**

**(1)** ஒப்புக்கொள் (1 tr), oppukkoo , 4 tr, recognize authority, claims of s.o.; accept s.t., எனக்கு அது தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டால் நான் அதை முழுமையாக ஒப்புக்கொள்வதில் சிரமம் இருக்காது, enakku adu sariyaa eḍuttu sollappaṭṭaduṇṇaa naan ade oppukkuradule

sramam eduvum irukkaadu, ⁻I wouldn't have any problem accepting and acknowledging it if it were explained to me clearly. **(2)** தெரிவி, terivi, 6b tr, acknowledge the receipt or existence of; inform, (HS99 3.14.1 3pn + dat.), தம்பி ஊருக்கு நல்லபடி வந்து சேர்ந்தானா என்பது பற்றி எனக்குத்தெரிவி, tambi nallabaḍi uurukku vandu seendaanaa appaḍingrade patti enakku terivi, ⁻Please acknowledge the details of my brother's arrival in town.

**acquaint**

**(1)** தெரியப்படுத்து, teriyappaḍuttu, 3 tr, make known, inform; publicize, முதல் அமைச்சர் மந்திரி சபையில் மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்றத்தை இன்று தெரியப்படுத்தினார், modal mandiri mandirisabeyle senjirukkra maaṭṭatte iṉṉekki teriyappaḍuttinaaru, ⁻The Chief Minister acquainted people with the changes that have been made in the cabinet today. **(2)** தெரியவை, teriyavayyi, 6b tr, make s.o. or s.t. well known; bring into common knowledge or use; make s.o. familiar or conversant with, (HS99 3.14.1 3pn + dat.), இப்படி ஒரு புதிய உணவகம் இருக்கிறது என்று மக்களுக்குத் தெரியவைக்கவேண்டும், ippaḍi oru pudu ooṭṭal irukkuṉṉu makkaḷukku teriyavekkaṉum, ⁻We should acquaint people with our new restaurant

**acquainted with, be**

**(1)** தெரி-(யும்), teri-(yum), 2b tr, be accustomed to, know (s.o.), (HS99 3.14.1 3pn + dat.), எனக்கு அவரைத் தெரியும், enakku avare teriyum, ⁻I know, am acquainted with him.

**acquire**

**(1)** தேடு, teeḍu, 3 tr, seek, earn, get, பழங்காலத் தமிழர்கள் கடல் கடந்து சென்று பணமும் செல்வமும் தேடினார்கள், paṟangaala tamiṟarunga kaḍal kaḍandu pooyi appa paṉamum selvamum teeḍinaanga, ⁻In the olden days the Tamils travelled out to many countries and acquired wealth. **(2)** கற்றுக்கொள் (1 tr), kattukkoo , 4 tr, study, acquire knowledge by studying, நான் எம்.ஏ. வகுப்பில்தான் மொழியியல் கற்றுக்கொண்டேன், naan em. ee. vahuppiledaan moṟiyiyal paaḍam kattukkiṭṭeen, ⁻I acquired a knowledge of Linguistics only for my M.A. degree course. **(3)** ஈட்டு, iiṭṭu, 3 tr, get or gather (wealth); pile up, amass, as wealth; store up (wealth), பணம் ஈட்டுவதுதான் அவனுக்கு ஒரே குறி, paṉam iiṭṭuradudaan avanooḍa oree kuri, ⁻His only aim is to acquire money.

**acquit**

**(1)** விடுவி, viḍuvi, 6b tr, discharge completely; exculpate, exonerate; get s.o. off, அப்பா போன மாதம் ஒரு கடத்தல் கூட்டத்தினரிடமிருந்து என் நண்பன் ஒருவனை விடுவித்தார், appaa poona maasam oru kaḍattal kuuṭṭattulerundu ennooḍa sneehidan oruttane viḍuviccaaru, ⁻Last month my father managed to completely acquit one of my friends from the charge of being part of a band of smugglers.

**acquit o.s.**

**(1)** நட, naḍa, 7 intr, conduct; behave, perform, அவன் பரிட்சையில் எப்படி நடந்துகொண்டான்?, avan paricceyile eppaḍi naḍandukiṭṭaan?, ⁻How did he acquit himself on the test? (How well did he do?)

**acrid, be**

**(1)** மூக்கைத் துளை, muukke toḷe, 6b intr, taste or smell sharp, spicy, acidic, pungent, or biting, நீ இன்று செய்திருந்த குழம்பு மூக்கைத் துளைத்தது, nii iṉṉekki senjirunda koṟambu muukke toḷeccidu, ⁻The lentil dish that you cooked today gave off a very acrid smell.

**act**

**(1)** ஒப்பச்செய் (1 tr), oppacceyyi , 2b intr, act so as to satisfy; carry out duties; perform in a certain way, அவன் தான் செய்துள்ளது சரியென்று மற்றவர்களை ஒப்பச்செய்துவிட்டான், avan taan senjadu sariiṉṉu mattavangaḷe ottukka vecciṭṭaan, ⁻He way he acted convinced others to accept his job performance as satisfactory. **(2)** துணி, tuṇi, 2b tr, act boldly or decisively, venture forth, presume to do s.t., எல்லோரும் துணிந்து அவரவர் பணிகளை ஆற்றுங்கள் என்று முதல்வர் மக்களைக்கேட்டுக்கொண்டார், ellaarum tuṉinji avangavanga veeleye seyyungaṉṉu modal mandiri janangaḷe keeṭṭukiṭṭaaru, ⁻The chief minister asked the people to act boldly in carrying out their duties. **(3)** மீறிநட, miirinaḍa, 7 intr, try to be cool or hip; dress and act cool; strut, pose;, அந்த வேலையாள் வரவர அத்துமீறி நடக்கிறான், anda veelekkaaran varavara romba attumiiri naḍakkuraan, ⁻That servant is acting like he's some kind of a cool dude. **(4)** சிரிக்கநடந்துகொள் (1 intr), sirikka naḍandukkoo, 4 intr, act in a ridiculous manner, act so as to bring ridicule upon o.s., நாம் எப்போதும் பலரும் நம்மைப் பார்த்துச் சிரிக்க நடந்துகொள்ளக்கூடாது, naama eppavum nereyaa peerum namme paattu sirikkra maadiri naḍandukka kuuḍaadu, ⁻We shouldn't act foolishly when other people are watching. **(5)** நடி, naḍi, 6b intr, act in a dramatic performance, etc., சிவாஜி கணேசன் திரைப்படங்களில் மிக

நன்றாக நடிக்கிறார், sivaaji ganeesan sinimaavule romba nallaa naḍikkraaru, ¯In his movie roles, Sivaji Ganesan acts very competently. **(6)** நடித்துக்காட்டு, naḍiccukkaaṭṭu, 3 tr, express dramatically, (HS99 2.3.5.1 [19]), ஆசிரியர் மாதிரியே என்னால் நடித்துக்காட்டமுடியும், vaaddiyaar maadiriyee ennaale naḍiccukkaaṭṭamuḍiyum, ¯I can act just like the teacher acts. **(7)** நடி, naḍi, 6b tr, perform or enact a play, நாகேஷ் அந்தப் படத்தில் அருமையாக நடித்தார், naagees̩ anda paḍattule arumayaa naḍiccaaru, ¯Nagesh acted excellently in that movie.

**act as if**

**(1)** பாவனை செய் (1 tr), baavane seyyi , 2b tr, feign; pretend, conceal o's true feelings, sentiments, ideas, etc., ஒன்றும் தெரியாததுபோல் அவள் பாவனை செய்கிறாள், oṇṇum teriyaadamaadiri ava baavane seyraa, ¯She is acting as if she knows nothing.

**act like**

**(1)** பாவனைசெய் (1 tr), baavane seyyi , 2b tr, pretend, simulate, put on; assume (a role, identity); playact, dissemble, sham, feign, fake, fake it, dissimulate, make believe, put on a false front, posture, go through the motions, (HS99 3.14.1, 3pn + dat), எல்லாம் தனக்குத் தெரியும் என்று பெரிய பாவனைசெய்கிறான் அந்த ஆள். அவனை நம்பாதீர்கள், ellaam tanakku teriyum appaḍiṇṇu baavane seyraan anda aaḷu. niinga avane nambaadiinga, ¯That guy acts like he knows everything, but don't take him at face value.

**act out**

**(1)** ஆக நடி, aaha naḍi, 6b intr, play the part or role of, நாடகத்தில் அவன் சீஸராக நடித்தான், naaḍahattule avan siisaraa naḍiccaan, ¯He acted out the part of Caesar in the production.

**activate**

**(1)** தூண்டு, tuuṇḍu, 3 tr, make active, as people; activate, animate, motivate; build a fire under (s.o.); ginger (s.t.) up, சமுதாயச்சேவை செய்யுமாறு என் நண்பர்களை நான் தான் தூண்டினேன், samudaaya seeve seyyumbaḍi naan taan ennooḍa sneeydarungaḷe tuuṇḍuneen, ¯I'm the one who took it upon himself to activate my friends and motivate them to do social service. ≈ 1: சுறுசுறுப்பாக்கு suṟusuṟuppaakku, 3 tr,

**active, be**

**(1)** சுறுசுறுப்படை, surusuruppaḍe, 2b intr, be (or become) busy or diligent; bustle about; be energetic; not let grass grow under o's feet, இப்பொழுதெல்லாம் என் தம்பி மிகவும் சுறுசுறுப்படைந்து தன் படிப்பைக் கவனிக்கிறான், ippellaam ennooḍa tambi romba surusuruppaḍenju tannooḍa paḍippule kavanam selutturaan, ¯These days my younger brother is very hard working and active in his studies.

**active, make**

**(1)** சுறுசுறுப்பாக்கு, surusuruppaakku, 3 tr, make active, activate; build a fire under s.o., எந்த வேலையும் செய்யாமல் சோம்பேறியாக இருந்தவனை நான் சுறுசுறுப்பாக்கினேன், enda oru veeleyum seyyaame irundavane naan surusuruppaakkineen, ¯I managed to build a fire under a lazy guy who wasn't doing any useful work, to sit up and be more active in his job.

**adapt o.s. to s.t.**

**(1)** மாற்றியமைத்துக்கொள் (1 intr), maattiyameccukkoo , 4 intr, adjust, accommodate o.s. to s.t.; get used to s.t., இடச் சூழ்நிலைக்கேற்ப வாழ்க்கை முறையை மாற்றி அமைத்துக்கொள்வது பாராட்டுக்குறியது, andanda eḍattukku eetta maadiri vaaṟkkeyle moreye maatti amecciradu nalladu, ¯1. It's best to adapt yourself to the conditions that prevail in the place where you live. 2. When in Rome, do as the Romans.

**adapt to**

**(1)** தழுவி எழுது, taṟuvi eṟudu, 3 tr, modify a piece of writing; edit; make an adaptation of, மேலை நாட்டு நாவல்களைத் தழுவிப் பல இந்திய மொழிகளில் தற்போது புதிய நாவல்கள் எழுதப்படுகின்றன, meel naaṭṭu naavalungaḷe taṟuvi ippa indiya moṟingaḷle pudu naavalunga eṟudappaḍudu, ¯There are many novels written in Indian languages that were modeled on western styles of novel writing and adapted to Indian tastes.

**add**

**(1)** சேர்த்துக்கொள் (1 tr), seettukkoo , 4 tr, perform addition, put together, collate, உன்னோடு இருக்கும் கணக்கோடு இதையும் கூட்டிச் சேர்த்துக்கொள், ungiṭṭe irukkra kaṇakkooḍu ideyum kuuṭṭi seettukkoo, ¯Please add this to the account that you already have set up.

**add (on)**

**(1)** சேர், seeru, 6 tr, join, write (s.t.) additionally; inscribe s.t. or s.o., எங்கள் கட்சியில் புதிதாக ஒரு இலட்சம் உறுப்பினர்கள் சேர்ந்துள்ளார்கள், enga kacciyile pudusaa oru laccam uruppinarunga seendu irukkraanga, ¯Tens of thousands of new members have recently added themselves to the party rolls.

**add up (to)**
**(1)** மொத்தமாகு, mottamaahu, 3b intr, total; come to, நீங்கள் வாங்கின சாமானுக்கெல்லாம் மொத்தம் நூறு ரூபாய் ஆகியது, niinga vaangina saamaanukkellaam mottam nuuru ruubaa aaccu, ~The things you bought add up to 100 rupees.

**addicted be/get/become**
**(1)** அடிமையாகு, aḍimeyaahu, 3b intr, surrender o.s. to a habit, practice; get accustomed to or dependent on s.t., என் நண்பன் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகிவிட்டான், ennooḍa naṇban kuḍippaẓakkattukku aḍime aahiṭṭaan, ~My friend has become addicted to drink.

**addle**
**(1)** குழப்பு, koẓappu, 3 tr, confuse, boggle, perplex, consternate, spoil, mess up, ஆசிரியர் அந்தக் குறிப்பிட்ட விளக்கத்தைச் சொல்லி மாணவர்களைக் குழப்பிவிட்டார், vaattiyaaru anda kurippiṭṭa veḷakkatte solli maaṇavangaḷe koẓappiṭṭaaru, ~The teacher has addled the students' minds by giving this type of misinformation.

**address**
**(1)** வணங்கு, vaṇangu, 3 tr, pay homage, pay o's respects to, wish formally; greet respectfully, நண்பர்களே உங்களையெல்லாம் முதலில் வணங்கி மகிழ்கிறேன், nanbarhaḷee, ungaḷeyellaam modalle vaṇanguvadule sandooṣappaḍureen, ~Dear friends, I have the great pleasure to be able address you all at this meeting. **(2)** முகவரி எழுது, mohavari eẓudu, 3 tr, write (on a letter, package, etc. ) directions for delivery, இந்தக் கடிதத்தின் உறையின்மீது சரியான முகவரி எழுதிப் போட்டுவிடு, inda kaḍidattu oremeele sariyaana mohavari eẓudi pooṭṭuḍu, ~Address the envelope of this letter correctly and then mail it. **(3)** பேர் உரையாற்று, peer oreyaattu, 3 intr, make, deliver a speech; hold forth; speechify, orate, கலைஞர் கருணாநிதி அவர்கள் கலைவாணர் அரங்கில் பொங்கல் விழாப் பேருரை ஆற்றினார், kalaiñar karuṇaanidi avarkaḷ kalaivaaṇar arangule pongal viẓaa peerore aattunaaru, ~Kalaignar Karunanidhi addressed [the multitudes] on the occasion of the Pongal festival. **(4)** சொற்பொழிவாற்று (3 tr), peeccu kuḍu , 6 tr, deliver a speech, lecture, address, etc., புது இலக்கணக் கொள்கைப் பற்றி எங்கள் பேராசிரியர் இன்று நல்லதொரு சொற்பொழிவு ஆற்றினார், pudu ilakkaṇakkoḷhe patti enga peeraasiriyaru nalla peeccu kuḍuttaaru, ~Our professor delivered an interesting lecture on the new grammatical theory. **(5)** ஈடுபடுத்திக்கொள் (1 tr), iiḍupaḍuttikkoo , 4 tr, attack a problem, be busy with, apply o.s. to; face up to; take on, இனிமேல் நல்ல சமுதாயப் பணிகளைச் செய்வதில் உன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொள், inimee nalla samudaya veelengaḷe seyradule unne muẓusaa iiḍupaḍuttikkoo, ~From now on you should address various social service projects more directly.

**adequate, be**
**(1)** போதும், poodum, irreg. (3pn + dat), be enough, suffice; be sufficient; meet the needs of; be adequate, do, serve, meet requirements, satisfy demands, answer/meet o's needs, answer/serve the purpose; (inf.) fit/fill the bill, hit the spot (HS99 3.14.1, 3pn + dat), இது உங்களுக்குப் போதுமா?, idu ongaḷukku poodumaa?, ~Will this be adequate for you? **(2)** போதுமானதாக இரு, sariyaa iru, 7 intr, be sufficient for, serve, (HS99 3.14.1, 3pn + dat), நீங்கள் கொடுத்த பணம் என் செலவுக்குப் போதுமானதாக இருந்தது, niinga kuḍutta paṇam ennooḍa selavukku sariyaa irundadu, ~The money you gave me was adequate for my expenses.

**adhere (to)**
**(1)** கடைப்பிடி, kaḍeppiḍi, 6b tr, be faithful to, abide by, follow; believe in and follow the practices of:, மஹாத்மா காந்தி வாழ்க்கையில் பல நல்ல கொள்கைகளைத் தவறாமல் கடைப்பிடித்தார், mahaatmaa gaandi vaaẓkkeyle pala nalla koḷhengaḷe tavaraama kaḍepiḍiccaaru, ~Mahatma Gandhi adhered to certain positive principles throughout his life. **(2)** கைப் பிடி, kai puḍi, 6b tr, follow, as an ideology; wed o.s. to; stick to, அவன் தன் வாழ்க்கைக் கொள்கைகளைத் தீவிரமாகக் கைப்பிடித்தான், avan tannooḍe vaaẓkke koḷhengaḷe tiivaramaa kaippuḍiccaan, ~He adhered to his life principles fervently.

**adjudicate**
**(1)** தீர்ப்புக்கூறு (3 tr), tiirppu sollu, 3c tr, pronounce judgement; make a formal judgement on a disputed matter; judge, try, hear, examine, arbitrate ; pronounce on, give a ruling on, decide, determine, settle, resolve, அந்த வழக்கை விசாரித்த நீதிபதி சட்ட விதிகளுக்கு உட்பட்டே தீர்ப்புக்கூறினார், anda vaẓakke visaaricca niidibadi saṭṭa vidingaḷukku uṭpaṭṭee tiirppu sonnaaru, ~The judge who heard the arguments adjucated the case according to the constitutional laws that are in force.

**administer**
**(1)** நிர்வகி, nirvahi, 6b tr, manage, direct, execute,

run, என் மனைவி கமலா எங்கள் ஆலையை அனைவரும் பாராட்டும் வகையில் நிர்வகித்து வருகிறாள், ennooḍa samsaaram kamalaa enga aalaye ellaarum paaraaṭṭura maadiri nirvahiccukiṭṭu varaa , ¯My wife Kamala administers our factory in such an efficent way that everybody praises her.

### admire

**(1)** போற்று (3 tr), paaraaṭṭu , 4 tr, esteem highly, praise, applaud, congratulate, கார்கிலில் வீர தீரச் செயல்களைச் செய்த நம் வீரர்களை மிகவும் போற்றுகிறோம், kaargille viira tiira seyalungaḷe senja namma viirarungaḷe romba paaraaṭṭuroom, ¯We admire greatly all our soldiers who boldly faught in the conflict that took place at Kargil [Ladakh].

### admit

**(1)** ஏற்றுக்கொள் (1 tr), eettukkoo , 4 tr, accept, give in; accept as adequate or true; allow into o's company, admit into society, receive, நான் சொன்னதுதான் உண்மை என்பதை முதலாளி இறுதியாக ஏற்றுக்கொண்டார், naan sonnadudaan sari appaḍingrade modalaaḷi kaḍesiyle eettukiṭṭaaru, ¯The owner of the firm finally admitted that what I said was correct. **(2)** உறுப்பினராக ஏற்றுக்கொள் (1 tr), uruppinaraa eettukkoo , 4 tr, adopt as a member; allow into membership, ஆசிரியர் சங்கத்தில் இந்தப் புதிய ஆசிரியரையும் உறுப்பினராக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன், aasiriyar sangattule inda pudu vaattiyaareyum uruppinaraa eettukumbaḍi keeṭṭukkureen, ¯I request that the teachers' association admit this new teacher into membership. **(3)** ஒப்புக்கொள் (1 tr), oppukkoo , 4 tr, accept, agree, accept as true; become a party to an agreement, உங்கள் கருத்தை நான் முழுமையாக இந்த விஷயத்தில் ஒப்புக்கொள்கிறேன், ungaḷooḍa karutte inda viṣayattule naan mur̤usaa oppukkureen, ¯As far as that's concerned, I admit that your point of view is completely right. **(4)** சேர்த்துக்கொள் (1 tr), seettukkoo, 4 tr, allow entrance to (a school); allow into society; allow into o's company, மதிப்பெண் குறைவாக வாங்கிய மாணவர்களை இந்தக் கல்லூரியில் சேர்த்துக்கொள்ள மாட்டார்கள், maarkku koreccalaa vaangina maaṇavangaḷe inda kalluuriyile seettukka maaṭṭaanga, ¯This college will not admit students who obtained low grades in their entrance examinations. ≈ 1: நுழையவிடு nor̤eyaviḍu, 4 tr, **(5)** ஒத்துக்கொள் (1 tr), ottukkoo , 4 tr, concede, allow; accede; agree; give in; confess that s.t. is true or the case; confess to or acknowledge (a crime, fault, or failure)., நீ செய்த தவறை ஒத்துக்கொள். அல்லது தண்டனை அனுபவிக்க நேரிடும், nii senja tappe ottukoo. illaaṭṭi, taṇḍane keḍekkum, ¯Admit that you have committed a mistake, otherwise you will have to pay the consequences.

### admit (to)

**(1)** ஒப்புக்கொள் (1 tr), oppukkoo , 4 tr, admit, consent, accept as true, confess that s.t. is true or the case; reach or come to an agreement or understanding, செய்த குற்றத்தை ஒப்புக்கொள்வது உனக்கு மிகவும் பலன் தரும், senja kuttatte oppukradu onakku rombavum nalladu seyyum, ¯If you were to admit to the mistake you made, it would definitely be beneficial.

### admonish

**(1)** கண்டி, kaṇḍi, 6b tr, speak with severity or earnestness; reprove; chastize, scold, எங்கள் கல்லூரி முதல்வர் இம்முறை மாணவர்களை மிகவும் கண்டித்துப் பேசினார், enga kalluuri prinsipaalu inda more maaṇavangaḷe romba kaṇḍicci peesinaaru, ¯This time, our college principal admonished us students severely. **(2)** எச்சரி, eccari, 6b tr, warn, இனிமேல் ஒழுங்காக வேலைசெய்யாவிட்டால் என்னை வேலையிலிருந்து நீக்குவதாக முதலாளி எச்சரித்தார், inimee or̤ungaa veeleseyyaaṭṭi enne veelelerundu niikkradaa modalaaḷi eccariccaaru, ¯The boss admonished me, saying that he would fire me if I don't work well from now on.

### adopt

**(1)** எடுத்துக்கொள் (1 tr), eḍuttukkoo , 4 tr, accept or agree to a policy, take up another's opinion or idea, etc., இந்தக் கொள்கையைப் பின்பற்றுவதாக நான் நேற்றுப் பிரமாணம் எடுத்துக்கொண்டேன், inda koḷheye pinpaṭradaa naan neettu oru pramaaṇam eḍuttukiṭṭeen, ¯Yesterday I took an oath to adopt this policy and agree to follow it from now on. **(2)** தழுவிக்கொள் (1 tr), tar̤uvikkoo , 4 tr, embrace, take up, convert to, adhere to, புத்த மதக் கொள்கைகள் அவருக்குப் பிடித்ததால் அவர் அந்த மதத்தை மனமுவந்து தழுவிக்கொண்டார், putta madakkoḷhe avarukku piḍiccadanaale avaru anda madatte tar̤uvikiṭṭaaru, ¯Since he embraced the principles of Buddhism he decided to adopt that religion. **(3)** எடுத்துக்கொள் (1 tr), eḍuttukkoo , 4 tr, take ownership of a policy; take up another's opinion or idea, etc., உன் தேவைக்கேற்ப நீ அவருடைய கொள்கையை எடுத்துக்கொள்ளலாம், onnooḍa teevekki eettaapple nii avarooḍa koḷheye eḍuttukkalaam, ¯You could adopt his idea and make

good use of it. **(4)** தத்து எடு, tattu eḍu, 6 tr, take into o's family, as a child; make s.o. o's legal heir, தனக்கு வாரிசு இல்லாததால் என் நண்பர் கேரளாவிலிருந்து ஒரு குழந்தையைத் தத்தெடுத்து வளர்க்கிறார், tanakku vaarisu illaadadanaale ennooḍa naṇbaru keeraḷaavulerundu oru koṟandeye tatteḍuttu vaḷakkuraaru, ¯As my friend has no birth children, he has adopted a child from Kerala.

### adorn

**(1)** அலங்கரி, alangari, 6b tr, decorate, beautify, put on ornaments; deck (out), இன்று தேர்த்திருவிழா நடக்க உள்ளதால் கோயில் விக்கிரகங்களைச் சிறப்பாக அலங்கரித்துள்ளார்கள், iṇṇekki teer tiruviṟaa naḍakka irukkradanaale kooyil vikkarahangaḷe romba aṟahaa alangariccirukkraanga, ¯Since there is going to be a chariot festival today, they have adorned the temple idols very beautifully. **(2)** சாத்து, saattu, 3 tr, put the caste mark on the forehead; dress or adorn the idol, ஆஞ்சனேயருக்கு வடை மாலை சாத்துவார்கள், aanjineeyarkku vaḍe maale saattuvaanga, ¯They adorn the idol with garlands.

### adulate

**(1)** துதி பாடு, tudi paaḍu, 3 tr, eulogize, flatter, worship; suck up to, apple-polish, இங்குள்ள சிலருக்குத் துதி பாடுவதே முக்கியமான தொழில், inge irukkra sela peerukku tudi paaḍradudaan toṟil, ¯Some of the people here make a habit of adulating others.

### adulterate

**(1)** கலப்படஞ்செய் (1 tr), kalappaḍan seyyi , 2b tr, dilute, water down, make impure by admixture of baser or foreign ingredients, அவன் அன்றாடம் உண்ணும் உணவுப் பொருள்களில் கலப்படம் செய்து பெரிய பணக்காரன் ஆகிவிட்டான், avan saappiḍra oṇavu poruḷhaḷe kalappaḍam senci periya paṇakkaaran aayiṭṭaan, ¯He has become a very rich man essentially by selling adulterated food products.

### advance

**(1)** முன்னேற்று, munneettu, 3 tr, promote, egg on, cause to move forward or progress or rise in rank, இந்த அரசு மாநிலத்தின் தொழில்நிலையைமுன்னேற்ற மிகவும் பாடுபடுகிறது எனில் அது மிகை அன்று, inda arasaangam maanilattooḍa toṟil nelameye munneeṭra rombavum paaḍupaḍuduṇṇu sonnaa adu konjamum mihevaahaadu, ¯This government is very much interested in, and works hard to advance the state in its industrial development. **(2)** முன்னேறு, munneeru, 3 intr, move forward, progress, be in the vanguard; get far ahead; make a name for o.s.; be distinguished by/for, மிகவும் கஷ்டப்பட்டு வாழ்க்கையில் என் தோழன் முன்னேறினான், ennooḍa tooṟan romba kaṣṭappaṭṭu vaaṟkkeyle munneerinaan, ¯My friend advanced in his career by hard work and overcoming great obstacles.

### advantageous, be

**(1)** அனுகூலமாக இரு, anuhuulamaa iru, 7 intr, be favorable, convenient, எங்கள் அலுவலகத்தில் இரண்டு வேலைக்காரர்கள் இருப்பது வேலையை வேகமாக நடத்த மிகவும் அனுகூலமாக இருக்கிறது, enga aafiisule reṇḍu veelekkaaranga irukkradu veele veehamaa romba anuhuulamaa irukku, ¯The presence of two servants working in our office is very advantageous for our working conditions. **(2)** பயன்படு, payanpaḍu, 4 intr, be useful, be helpful, எப்பொழுதோ வாங்கிய என்னுடைய பழைய புத்தகம் இப்பொழுது என்னுடைய ஆய்வுக்கு மிகவும் பயன்படுகிறது, eppavoo vaangina ennooḍa paṟeya pustaham ippa ennooḍa aaraayccikki romba payanpaḍudu, ¯This old book I bought a while back is now turning out to be quite advantageous for my research. **(3)** சாதகமாக இரு, saadahamaa iru, 7 intr, benefit; be favorable for, be conducive or contributive to; be beneficial to; work to the advantage of; be conducive to/for, நிலைமை எதிர் அணிக்குச் சாதகமாக இருக்கிறது, nelame edir aṇikki saadahamaa irukku, ¯The situation is advantageous to our opponents.

### advertise

**(1)** விளம்பரப்படுத்து, veḷambarappaḍuttu, 3 tr, publicize, make known; tout; describe or draw attention to (a product, service, or event) in a public medium in order to promote sales or attendance, டைடன் கம்பனிக்காரர்கள் தங்கள் வியாபாரம் பெருக அடிக்கடி விளம்பரப்படுத்துகிறார்கள், ṭaiṭan kampanikaaranga avangaḷooḍa veevaaram vaḷara aḍikkaḍi veḷambarappaḍutturaanga, ¯The Titan Company very often advertises through different media to publicize their business development. **(2)** எடுத்துக்கொள் (1 tr), eḍuttukkoo , 4 tr, promote o's business by publishing information in news media., புதிய வியாபாரம் நன்கு வளர வேண்டுமென்றால் நீ நன்றாக எடுத்துக்கொள்ளவேண்டும், pudu vyaabaaram nallaa vaḷaraṇumṇṇaa nii nallaa eḍuttukkaṇum, ¯In order to promote the new business you better advertise heavily.

### advice, give

**(1)** அறிவுரை கூறு, arivure sollu, 3c tr, counsel, advise, பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினர்

புதிய பட்டதாரிகளுக்குப் பல நல்ல அறிவுரை கூறினார், paṭṭamaḷippu viṟaavule serappu virundaaḷarnga paṭṭadaaringaḷukku nereya nalla arivure sonnaaru, ‾The chief guest at the annual convocation gave useful advice to the young graduates. **(2)** புத்திசொல்லு, buddisollu, 3c tr, urge, encourage, call on, enjoin, charge, press; bid, appeal to, entreat, implore, நாட்டாமை அவனுக்குப் புத்திசொல்லி அனுப்பிவைத்தார், naaṭṭaame avanukku buddisolli anuppiveccaaru, ‾The village headman gave him advice and then sent him off.

### advise

**(1)** தெரிவி, terivi, 6b tr, inform (esp. commercially or officially), உயர் அதிகாரி இன்று நம் அலுவலகத்திற்கு வருகை புரிவது எனக்குத் தெரிவிக்கப்படவில்லை, periya adihaari iṇṇekki namma aafiisukku varuvadu enakku terivikkappaḍale, ‾I was not advised that an important official was supposed to visit the office today. **(2)** அறிவுரை கூறு (3 tr), buttimadi sollu , 3c tr, counsel, give advice to, இளம் பிள்ளைகளுக்கு அவ்வப்பொழுது தேவையான நல்ல அறிவுரைகள் கூறினால் பலன் ஏற்படும், eḷam piḷḷengaḷukku appappa nalla buttimadi sonnaa adanaale nalla balan eerpaḍum, ‾If we properly advise our growing young children, that will certainly help them come up in life.

### advocate

**(1)** வாதாடு, vaadaaḍu, 3 intr, argue for (or against); strongly recommend; push for; champion, மாற்றிலக்கணக்கோட்பட்டைப் பற்றி அந்த இரண்டு ஆய்வாளர்களும் மிகவும் வாதாடினார்கள், maaṭrilakkaṇakkooḍpaṭṭe patti anda renḍu aaraaycciyaaḷarngaḷum vaadaaḍinaanga, ‾The two researchers advocated for the theory of transformational grammar.

### affable, be

**(1)** தாழ்ந்துபோ, taa(ṛ)ndupoo, 3b intr, yield, be accommodating, yielding, or agreeable; bend or bow down; bow and scrape, நான் யார் கஷ்டம் கொடுத்தாலும் தாழ்ந்து போக மாட்டேன், naan yaaru kasṭam kuḍuttaalum adanaale taandu pooha maaṭṭeen, ‾I haven't given anyone any trouble so I won't make an effort to be affable.

### affect

**(1)** தை (6b intr), paḍu , 4 intr, strike, pierce the mind; have an effect or impact on; make a difference to; influence, act on, work on; change, alter, modify, transform, form, shape, sway, bias, அவள் பேசிய சில வார்த்தைகள் என் மனதில் சுறுக்கென்று தைத்தன, ava peesina sela vaartteynga ennooḍa manasule surukkuṇṇu paṭṭudu, ‾Some of the words she said affected me very deeply. **(2)** உறை, ore, 2b intr, cut to the quick, affect acutely; be sensitive to, be bothered by, அவன் அதற்கு மேல் செய்தது எனக்குப் பலமாக உறைத்தது, avan adukku meele senjadu enakku balamaa orenjadu, ‾What he did next affected me deeply. **(3)** தாக்கு, taakku, 3 tr, have an affect on, as o's health or interest, சென்ற வருடம் அவனைக் கொடிய விஷக் காய்ச்சல் தாக்கியது, poona varuṣam avane veṣa kaaccalu taakkiccu, ‾It was that terrible virus last year that affected his health. **(4)** தொடு, toḍu, 4 tr, move the feelings of, touch; influence, act on, work on, have an impact on; sway, ஆனந்தியின் கதையில் வரும் சில பாத்திரப் படைப்புகள் என் மனதைத் தொட்டன, aanandiyooḍa kadeyle varum sela paattira paḍeppunga ennooḍa manase toṭṭudu, ‾Some of the characters that are found in the stories of Anandhi affect me deeply. **(5)** தை (6b intr), kuttu , 3 intr, strike, pierce the mind, be biting, bitter, stinging; insult, cut to the quick, ஆசிரியர் திட்டின சொற்கள் என் மனதைத் தைத்தன, vaattiyaaru tiṭṭuna vaartteynga ennooḍa manase appiḍiyee kuttiḍucci, ‾Our teacher's abusive words affected me very negatively. **(6)** பாதி, paadi, 6b tr, produce an effect upon, influence, esp. negatively, உன் சகோதரனுடைய கெட்ட பழக்கங்கள் அவனுடைய நண்பனையும் பாதிக்கிறது என்றே சொல்ல வேண்டும், unnooḍa sahoodaranooḍa keṭṭa paṛakkanga avanooḍa nanbaneyum baadikkiduṇṇudaan sollaṇum, ‾I think it must be said that your brother's bad behavior has affected his friend as well.

### affected, act/be

**(1)** அலம்பல் பண்ணு, alambal paṇṇu, 3 intr, strut, put on airs, act haughtily; act superciliously; condescend, அவன் வெளிநாட்டிலிருந்து வந்த பிறகு அதிகமாக அலம்பல் பண்ணுகிறான் இந்தப் பையன், veḷinaaṭṭulerundu vandadukkappram, eppa paattaalum alambal paṇṇraan inda payyan, ‾After he came back from abroad, all he does is act very affected, putting on airs and so on. **(2)** அலட்டிக்கொள் (1 tr), alaṭṭikkoo , 4 intr, be artificial or unnatural; act strangely or weirdly; put on airs; be stuck up; have o's nose in the air; be supercilious or haughty, எதிர்பாராமல் சொத்து வந்ததும் அவன் இப்பொழுது அதிகமாக அலட்டிக்கொள்கிறான், edirpaakkaame sottu vandadum avan ennamoo romba